# வனக்குறவரின் வாழ்வியல் - நீ. பி. அருளானந்தத்தின் ‘இந்தவனத்துக்குள்’ என்னும் நாவலினூடான ஒரு தேடல்

ம. இரகுநாதன்


## ஆய்வுச்சுருக்கம்

ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கிய உலகில் விளிம்புநிலை மாந்தர்களின் வாழ்வியலைப் படைப்பிலக்கியமாக்கி வருபவர்களில் நீ. பி. அருளானந்தமும் ஒருவர். இவரின் ‘இந்த வனத்துக்குள்’ என்னும் நாவல் இலங்கையில் வாழ்கின்ற வனக்குறவர்களின் வாழ்வியலை எடுத்துக் காட்டுகின்றது. இலங்கையில் வாழும் வனக்குறவர்கள் தென்னிந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள். இவர்களின் தாய்மொழி தெலுங்காகும். நிரந்தரமான வாழிடமின்றி அலைந்து திரியும் இக்கூட்டத்தினர் வேட்டையாடுதல், பாம்பாட்டுதல், குரங்காட்டுதல், சாத்திரம் சொல்லுதல் முதலான தொழில்களைச் செய்துவருகின்றனர். விஜயனின் கூட்டத்தினருடன் இலங்கைக்கு வந்த தெலுங்கர்களையும், மன்னராட்சிக் காலத்தில் அரண்மனைகளில் பணிபுரிந்த தெலுங்கர்களையும் தமது முன்னோர்களாகக் கூறிவரும் இக்கூட்டத்தினர் சமூகமட்டத்தில் ஒதுக்கப்பட்டவர்களாக வாழ்ந்து வந்தாலும் இவர்கள் தமக்கெனத் தனியான பண்பாட்டு அடையாளங்களைப் பேணிவருகின்றனர். இவை இந்நாவலினூடாக இலக்கியப் பதிவாகியுள்ளன.


*திறவுச்சொற்கள்:-* விளிம்புநிலை, குறவர், மகுடி, குடில், கொத்துவேலி, முறம் மற்றும் பஞ்சரம்

### ஆய்வுப் பின்னணி

ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கிய உலகில் விளிம்பு நிலை மாந்தர்களின் வாழ்வியலைப் படைப்பிலக்கியமாக்கி வருபவர்களில் முக்கியமான ஒருவர் நீ. பி. அருளானந்தம். வவுனியா மாவட்டத்திலுள்ள சூசைப்பிள்ளையார் குளம் என்னும் விவசாயக் கிராமத்தில் பிறந்த நீ. பி. அருளானந்தம் வவுனியா மாவட்டத்தின் சில பகுதிகளிலும், கிழக்கிலங்கைப் பிரதேசத்திலும் நிலையான இருப்பிடமின்றி அலைந்து திரியும் வனக்குறவர்களின் வாழ்க்கையின் அவலங்களை “இந்த வனத்துக்குள்” என்னும் நாவலின் மூலமாக வெளிச்சத்திற்குக் கொண்டு வந்துள்ளார். வவுனியா மாவட்டத்தில் நொச்சிகுளம், சிதம்பரபுரம் முதலான இடங்களிலும், கிழக்கிலங்கையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள அளிக்கம்பை பிரதேசத்திலும் செறிவாக வாழ்ந்துவரும் வனக்குறவர்கள் தெலுங்கு மொழியினையே தமது தாய்மொழியாகக் கொண்டிருந்தாலும் வாழும் சூழலுக்கேற்ப தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளையும் பேசக் கூடியவர்களாகவே உள்ளனர். இவர்கள் வெவ்வேறு பகுதிகளில் வாழ்ந்து வந்தாலும் தமக்குள் ஒத்த பண்பாட்டுப் பாரம்பரியங்களைக் கொண்டவர்களாகவே உள்ளனர்.

பழந்தமிழ் இலக்கியங்களிலும் இடைக்காலக் குறவஞ்சி இலக்கியங்களிலும் குறிசொல்லும் குறமகளினூடாக குறவர் சமூகம் இலக்கிய உலகிற்கு அறிமுகமாகியிருந்தாலும் இவ்வாறான இலக்கியங்கள் எதுவும் இவர்களின் வாழ்க்கையினை விரிவாகக் கூறியிருக்க

வில்லை. இதனால் இவர்கள் இலக்கிய உலகில் தொடர்ந்தும் தீண்டப்படாதவர்களாக வே இருந்தனர். அண்மைக் காலங்களில் நவீன இலக்கியப் படைப்பாளிகள் சிலர் விளிம்புநிலை மாந்தர்களை இலக்கியத் திற்குள் கொண்டுவர முற்பட்டபோதே தோட்டிகளும், குறவர்களும், பிறரும் இலக்கிய நாயகர்களாக்கப்பட்டனர். அந்த வகையில் நீ. பி. அருளானந்தத்தின் 'இந்தவனத்துக்குள்' என்னும் நாவல் இலங்கையிலுள்ள வனக்குறவர்களின் வாழ்க்கையை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இலங்கையில் வாழும் வனக்குறவர்களின் பூர்வீகம்

வனக்குறவர்கள் இலங்கையில் நீண்டகாலமாகவே வாழ்ந்து வந்தாலும் அவர்களின் பூர்வீக வரலாறு பலரும் அறியாத ஒன்றாகவே இருந்து வருகின்றது. நாவலில் வருகின்ற மகுடிக் காரக் குறவன் ஒருவனின் வாயிலாக இவர்களின் பூர்வீக வரலாறு கூறப்படு கின்றது. இதன்படி இலங்கையில் வாழும் வனக்குறவர்களின் முன்னோர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். பொதுவாக இவர்களைக் குறவர்கள் என்றே குறிப்பிட்டாலும், செய்யும் தொழிலுக்கேற்ப இவர்கள் பல்வேறு தொழிற் பிரிவின ராகவும் காணப்படுகின்றனர். உப்பு, புளி, வெல்லம் ஆகியவற்றைக் கழுதையில் ஏற்றிச் சென்று விற்பவர்கள் உப்புக் குறவர்கள் என்றும், கறிவேப்பிலை விற்பவர்கள் வேப்பிலைக் குறவர்கள் என்றும், திருட்டுத் தொழில் செய்பவர்கள் கேப்மாறிக் குறவர்கள் என்றும் (தலைப்பாகைமாற்றுபவர்கள்) அழைக்கப்படுகின்றனர். இவர்களைவிட பச்சை குத்திக்குறவர்கள், குஞ்சிக்குறவர்கள் (இவர்கள் பசைபூசிய பூச்சிகளைக் கயிற்றில் கட்டித் தொங்கவிட்டு அதில் பறவைகள் வந்து ஒட்டிக்கொண்டதும் அவற்றைப் பிடித்துக்கொள்வார்கள்), காதுகுத்திக் குறவர்கள், கூடை, முறம் கட்டும் குறவர்கள், பஞ்சரம் கட்டிக் குறவர்கள், அம்மிக் கொத்துக் குறவர்கள், பச்சைமலைக் குறவர்கள், பண்டி வளர்க்கும் குறவர்கள், மூச்சு நரிக்குறவர்கள், ஊர்க்குறவர்கள் (இவர்கள் நாடோடி வாழ்க்கையை விட்டு விட்டு ஊர்களில் தங்கியிருப்பவர்கள்) எனப் பல்வேறு வகையான குறவர்களின் சாதிப்பிரிவுகளை மகுடிக்காரன் விபரிக்கின்றான் (அருளானந்தம், 2014, ப. 153).

மேலும் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்த விஜயனின் கூட்டத்தில் முப்பதுபேர் தெலுங்கு பேசும் குறவர்களே என்றும், அவர்களின் சந்ததியினரே இப்போது இலங்கையில் வாழும் வனக்குறவர்கள் என்றும் கூறும் மகுடிக்காரன் குறவர்களுக்கு அரசபரம்பரைத் தொடர்பு இருந்ததை எடுத்துக்காட்டுகின்றான் (அருளானந்தம், 2014, ப. 155).

மேலும் இலங்கையை ஆட்சி செய்த மன்னர்கள் இந்திய அரச குலப்பெண்களைத் திருமணம் செய்த போது அப்பெண்களுக்குப் பணிவிடை செய்வதற்காக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்டவர்கள் தெலுங்கு பேசும் குறவர்களே என்றும் அவர்களின் வழியினரே இப்போது வாழ்ந்து வருகின்றனர் என்றும் மகுடிக்காரன் கூறுகின்றான் (அருளானந்தம், 2014, ப. 157).

மேலும் இலங்கையை ஆட்சி செய்த தேவநம்பியதீசன் என்னும் மன்னன் பௌத்த மதத்தை ஆதரித்தபோது கொலை, களவு, மது, மாமிசம் உண்ணுதல் முதலியவற்றைத் தடுத்ததாகவும் இக்கட்டளையை மீறிய அரண்மனைப் பணியாளர்களான தெலுங்கர்கள் சிலர் கழுத்துவெட்டிக் கொல்லப்பட்டனர் என்றும் ஏனை

யோர் காட்டிற்குத் துரத்தப்பட்டனர் என்றும் இவர்கள் நிரந்தரமான குடியிருப்பு இல்லாததாலும் அரசனின் படைகளுக்குப் பயந்தும் காட்டில் அலைந்து திரிந்தனர் என்றும் மகுடிக்காரன் கூறுகின்றான் (அருளானந்தம், 2014, ப. 159).

மேலும் கண்டி மன்னனாக இருந்த ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன் என்னும் சிம்மாசனப் பெயருடைய கண்ணுச் சாமியும் மனைவி ரங்கம்மாவும் தெலுங்குக் காரர்களே என்றும் மகுடிக் காரன் கூறிப் பெருமைப்படுகின்றான் (அருளானந்தம், 2014, ப. 160).

குறவர்களின் பூர்வீகம் இவ்வாறு இருப்பினும் இலங்கையில் தற்போது வாழ்கின்றவர்கள் காட்டில் வேட்டையாடுதல், பாம்பாட்டுதல், குரங்காட்டுதல், சாத்திரம் சொல்லுதல், கூடைபின்னுதல் ஆகிய தொழில்களையே செய்து வருவதால் இவர்களைப் பொதுவாக குறவர் என்றே அழைப்பது வழக்கம் (அருளானந்தம், 2014, ப. 153).

வாழிடம்

வனக்குறவர்கள் ஏனைய மக்களுடன் சேர்ந்து கொள்ளாமல் ஒதுக்குப்புறங்களில் தனியாகவும், கூட்டமாகவும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் குடிசைகள் தாழிப்பனை ஓலைகளால் வேயப்பட்ட சிறு குடிசைகள் ஆகும். கோடைகாலத்தில் இக் குடிசைகளில் இருந்து சமாளித்தாலும் மாரிகாலத்தில் இவர்கள் வெளர்க்கும் மந்தைகளும், நாய்களும் வந்து குடிசைக்குள் ஒதுங்குவதால் இவர்கள் தமது குழந்தை குட்டிகளையும், உணவுப் பொருட்களையும் மழையிலிருந்து பாதுகாக்க முடியாமலும், நனைந்த ஆடைகளை மாற்ற முடியாமலும் துன்பமுறுகின்றனர் (அருளானந்தம், 2014, ப. 54).

குலமரபு

இலங்கையில் வாழும் வனக்குறவர்களிடையே தாபலோர், துகுடோர் என்ற இரு வேறுபட்ட குலங்கள் உள்ளன. இவர்களை செஞ்சேரி, வடசேரி என்றும் அழைப்பர் (அருளானந்தம், 2014, ப. 56). இரு குழுவினரும் ஒரே விதமான வாழ்க்கையினையே வாழ்ந்து வந்தாலும் திருமண விடயத்தில் ஒரே குழுவுக்குள் திருமணம் செய்வதை இவர்கள் குற்றமாகவே கருதுகின்றனர். குற்றம் புரிபவர்களுக்கு குல மரபுப்படி தண்டனையும் வழங்கப்படுகின்றது. குலம் மாறியே திருமணம் செய்வதால் குலங்களுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் இல்லை என்பதை உணரக் கூடியதாக உள்ளது.

தொழில்

வனக்குறவர்கள் வேட்டையாடுதல், பாம்பாட்டுதல், குரங்காட்டுதல், சாத்திரம் சொல்லுதல் முதலிய தொழில்களையே பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகின்றனர். பரம்பரை பரம்பரையாகச் செய்து வருகின்ற தொழில் என்பதால் இவர்கள் இத்தொழில்களில் தேர்ச்சியும், அனுபவமும் மிக்கவர்களாக உள்ளனர். சானறாக காட்டில் நாய்கள் எழுப்புகின்ற ஒலியையும் அவற்றின் குரைப்பு முறையினையும் பார்த்த அளவிலேயே அவை எவ்வாறான மிருகத்தைக் கண்டிருக்கின்றன என்பதை இவர்களால் புரிந்து கொள்ள முடிகின்றது (அருளானந்தம், 2014, ப-ப.4–5).

குரங்காட்டிப் பிழைப்பவர்களுக்கு குரங்கைப் பழக்கிவெடுப்பதற்கு மூன்று வருடங்கள் வரையில் செல்வதாகவும், பாம்பாட்டி களுக்கு இவ்வாறான

சிரமம் இல்லை என்றும் குரங்காட்டிப் பிழைக்கும் குறவன் கூறுகின்றான். (அருளானந்தம், 2014, ப. 37). பாம்பாட்டிகள் காட்டில் பாம்பைப் பிடித்து அதனைப் பையிலடைத்து பட்டினியாகக் கிடக்க வைத்த பின்னர் அதன் விஷப்பற்களைப் பிடிங்கி எடுக்கின்றனர். இதன் பின்பே பாம்புப் பெட்டியினுள் அதனைப் போடுகின்றனர். மேலும் நாகபாம்பு காலம் செல்லச்செல்ல சோம்பேறித்தனம் வந்து ஆடாமல் படுத்துவிடுவதாகவும் அதன் பின்னர் அதனைக் காட்டில் விட்டு விட்டு வேறுபாம்பைத் தேடிப்பிடிக்க வேண்டிய நிலை ஏற்படுவதாகவும் கூறப்படுகின்றது (அருளானந்தம், 2014, ப. 38). எவ்வாறாயினும் பாம்பாட்டுவதும், குரங்காட்டுவதும் பிழைப்புக்கேற்ற இலகுவான தொழில்களாக இல்லை என்பது தெரிய வருகின்றது.

குறவர்களில் பெண்களே பெரும்பாலும் சாத்திரம் சொல்லும் தொழிலில் ஈடுபடுகின்றனர். வவுனியா, நொச்சிக்குளம் பகுதியிலிருந்து காலைவேளையில் வவுனியாவின் நகரப்புறங்களுக்கு சாத்திரம் சொல்வதற்காகப் புறப்பட்ட குறவர்குலப் பெண்களின் நடவடிக்கைகளை ஆசிரியர் பதிவுசெய்துள்ளார். காலை வேளையில் செல்லம்மா வீட்டிற்குச் சென்ற குறத்தி மசக்கா தனது இனிய குரலில் அம்மா என்று அழைக்க அங்கு வந்த செல்லம்மா, என்ன காலேல வந்திருக்கிறாய்? எனக் கேட்டதும் மசக்காவின் வாயிலிருந்து புல்லாங்குழலிலிருந்து வெளிவந்தது மாதிரியான இசையாக நறுமணத்தோடு பல சொற்கள் வருவதாகக் கூறிய ஆசிரியர் அவளின் வார்த்தைகளைப் பதிவு செய்துள்ளார்.

*"இந்த வீட்டிற்கு மகராசிநீ.......... ஆனா இப்ப உண்ட வாழ்க்க எங்கிறது கனகஷ்டத்தில அலையிற நேரமாத்தான் போவுது தாயே....... எண்ணாலும் நீ வணங்கிற அம்மாளால உன் கஷ்டமெல்லாமே விலகிப்போற காலம் உனக்குக் கிட்ட வருது தாயே......... சொல்லப்போனா ஒரு சொத்து உனக்கு சேந்திக்கிற காலம் கிட்ட வருதுதாயே........... வாம்மா வந்து உன் கைய விரிச்சுக் காட்டி ஒரு சாத்திரம் கேளு அம்மா". (அருளானந்தம், 2014, ப. 45)*

*"............. உண்டய மனசில எதுக்கும் கொஞ்சம் அவசரம் கூடாது தாயி......... நீ எந்தக் காரியத்தை நம்பினாலும் நினைக்கிறது ஒண்டு நடக்கிற தெண்டா ஒண்ணு எண்டமாதிரிதான் இப்ப நடக்கிது. உங்களேக் கெடுக்கணும், கெட்ட பெயருண்டாக்க வேணும், பொய்ச் சாட்சியில மாட்டணுமெண்ணு எத்தனையோ பேர் பெரிய பெரிய திட்டமெல்லாம் போட்டாங்க! ஆனா அவங்க பாத்தது போல நீ நம்பிற ஆண்டவன் அதுக்கு வழி விடேலத் தாயி......" .(அருளானந்தம், 2014, ப. 45)*

மசக்காவின் வார்த்தைகள் செல்லம்மாவுக்கு தனது மனதைத் திறந்து பார்த்து அவள் எல்லா உண்மைகளையும் கூறுவது போலவே தெரிந்தது. செல்லம்மா வாசலைவிட்டு இறங்கி குறத்தியின் அருகில் வருகின்றாள். குறத்தி செல்லம்மாவைப் புரிந்துகொண்டு,*"நீ கொடுத்தத வாங்கப்போனா அடுத்தது பகையா வருதம்மா! நீ நல்லத சொல்லப்போனாலும் உண்ட வீட்டில கேக்கிறதிக்கு ஒறுவனுமில்லை! அப்பிடியா ஊறுக்கும் ஒழைச்சு, உற்றாருக்கும் பாடுபட்டு தேடுகிறதேதும் உனக்கில்லையெண்ட மாதிரி சீவிச்சே..... இந்த வயசாச்சி! இத்தனை காலமாச்சி! ஒருவர கெடுக்கணும், கெடுத்து நாம வாழணும், ஒறுவண்ட சொத்துக்கு நாம ஆசவைக்கணும் எண்டு மனசில நீ நினைச்சதில்ல..... ஆனா அதுக்கு மாத்தமா நாமும் பிழைச்சுக்க*

ணும், எல்லாரும் சேர்ந்து பிழைச்சுக் கணுமுண்ணுதான் நீ நினைக்கிறே........ செஞ்சிக்கிறது நீதறும நீதி..ஆனா உனக்கு வந்ததோ கறும நீதி..எண்ணாலும் நீ இப்ப நினைச்ச ஒரு காரியம் முன்னேற்றமான ஒரு திட்டம், கிட்ட வாக்கில உனக்கு செரிவரத்தான் போவுது...அதவந்து உன் செல்வக்கைய நீட்டி ஒரு சாத்திரம் வந்து கேளும்மா.." (அருளானந்தம், 2014, ப. 46)

மசக்காவின் வார்த்தைகளில் மயங்கிய செல்லம்மா மனங் குளிர அவள் கேட்டதையெல்லாம் கொடுத்தனுப் புகின்றாள். இது அவர்களின் தொழில் திறமையையும் மற்றவர்களை வசீகரிக்கும் ஆற்றலையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளது.

## திருமணமுறை

குறவர்கள் பெண் கேட்டுச் செல்வதற்கு ஞாயிற்றுக் கிழமையினையே சிறந்த நாளாகக் கருதுகின்றனர். (அருளா னந்தம், 2014, ப. 163). தும்பண்ணாவுக்கு இதயராணியைப் பெண்கேட்டு ஞாயிற் றுக் கிழமையிலேயே செல்கின்றனர். சீதனமாக மந்தைகள் சிலவற்றையும், வேட்டைக்கான நாய்கள் சிலவற்றையும் கொடுப்பதாகப் பெண்வீட்டார் கூறுகி ன்றன. முன்னர் பாம்புப்பெட்டி, பாம்பு, ஈட்டி, பாம்புக்கு உணவான எலிகள், தவ ளைகளைப் பிடித்து வைக்கும் பெட்டி கள், நாய்கள், அம்மி, உலக்கை என்பவற்றையே சீதனமாகக் கொடுக்கும் வழக்கம் இருந்ததென்பதையும் ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். (அருளானந்தம், 2014, ப. 165). திருமணச் சடங்கை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான காலம் தை, மாசி மாதங்களே என்பதும் இவர்களது நம்பிக்கையாகும் (அருளான ந்தம், 2014, ப. 173).

திருமணமான ஆணையும், பெண் ணையும் மூன்று நாட்கள் தனித்தனியே பிரித்து வைத்திருக்கின்றனர் (அருளானந்தம், 2014, ப. 173). மூன்று நாட்கள் இதற்கென அமைக்கப்பட்ட குடிசைகளில் தனித்திருந்த பின்னர் நாலாவது நாள் ஆண் மகனைப் பெண்ணின் குடிசைக்குள் விடுகின்றனர். இருவரும் ஒன்று சேர்ந்ததும் ஐந்தாம்நாள் எல்லோருக்கும் முன்பாக ஆண்மகன் பெண்ணுக்கு பாசிமணி மாலையைக் கட்டுகின்றான். இதுவே தாலியாகக் கருதப்படுகின்றது.

பாசிமணி மாலையைத் தாலியா கக் கட்டுவது தொடர்பாக மகுடிக்காரன் பழைய கதையொன்றினைக் கூறுகின் றான். முன்னொரு காலத்தில் திருமணத் திற்கு வந்த மாப்பிள்ளை தாலியைக் கொண்டுவர மறந்துவிடுகின்றான். ஊர்ப் பெரியவர்கள் உடனடியாக அங்கிருந்த ஒருவனை நகைக்கடைக்கு அனுப்புகின் றனர். அவனும் குறித்த நேரத்திற்குள் தாலியை வாங்கிவரத் தவறியதால் முகூ ர்த்த நேரம் தவறிவிடக்கூடாது என்பத ற்காக கறுப்புப் பாசிமணி மாலையைப் பெண்ணுக்குத் தாலியாகக் கட்ட வேண் டியதாயிற்று. இதுவே பின்னர் குலவழக்க மாக மாறியது என்பதே இவர்களது கருத்தாக உள்ளது (அருளானந்தம், 2014, ப. 175).

மேலும் தாலிகட்டுவதற்கு முன்னர் தனித்தனியாக இருக்கும் மாப்பிள்ளையும், பெண்பிள்ளையும் அந்த நாட்களில் பாற் தண்ணீரிலேயே முழுகு வது வழக்கம். இதற்காக பச்சை அரிசியை அரைத்தெடுத்து மஞ்சளும் கலந்து அதனைத் தண்ணீரில் கலந்து பாற் தண்ணீ ரைத் தயாரிக்கின்றனர் (அருளானந்தம், 2014, ப. 176). திருமணமாகும் ஆண், பெண்ணின் தாய்க்கு பாற்காசு கொடுக்

கும் வழக்கமும் உள்ளது. இது பெண்ணுக்குப் பாலூட்டியதற்காக வழங்கப்படுகின்ற காசாகவே உள்ளது (அருளானந்தம், 2014, ப. 176).

மாப்பிள்ளை பெண்வீட்டிற்கு வரும்போது பெண்வீட்டார் வெள்ளைச் சேலையை மாப்பிள்ளைக்கு மேலாகப் பிடித்தவாறே அவரை அழைத்து வருகின்றனர். பாசிமணியைக் கட்டிய பின்னர் மாப்பிள்ளை பெண்பிள்ளை ஆகிய இருவரும் இதுபோலவே மாப்பிள்ளையின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர் (அருளானந்தம், 2014, ப. 177).

## கடவுள் நம்பிக்கை

வனக்குறவர்கள் இந்துமதத் தெய்வங்களான முருகன், வள்ளி, தெய்வயானை, பிள்ளையார், திருமால், காளி, துர்க்கை, கண்ணகி, வைரவர் ஆகியவற்றையும் கும்பமுனி, மாடாசாமி, பிடாரி முதலான சிறு தெய்வங்களையும் வழிபடுகின்றனர் (அருளானந்தம், 2014, ப. 75, 163).

அம்மனுக்கான பொங்கலைப் பந்தல்போட்டு மடைவைத்துக் கொண்டாடுகின்றனர். பந்தலை நான்கு பகுதிகளாகப் பிரித்து அவற்றில் அம்பாள், மாரி, காளி, கந்தசாமி ஆகியோருக்கு தனித்தனியே மடை வைக்கின்றனர் (அருளானந்தம், 2014, ப. 79). மடையில் மண்களியினால் செய்யப்பட்ட தெய்வ உருவங்களையும் வைத்திருப்பர். மடைவைத்த இடத்தில் பொங்கலிட்டு பொங்கலின் ஒரு பகுதியை கவள உருண்டைகளாக்கி அவற்றை நீரில் கரைத்து விடுகின்றனர். இவ்வேளையில் காளிக்கு நான்கு கோழிகளை வெட்டிப் பலியிடுகின்றனர். பலியிடப்பட்ட இறைச்சியை ஊர்ப் பெரியவர்களுக்கும், இனத்தலைவர்களுக்கும் வழங்குகின்றனர் (அருளானந்தம், 2014, ப. 79).

வேட்டைக்குச் செல்லும் போது மரக்கிளையை ஒடித்து அதனை மரக்கொப்பில் கொழுவி அதனையே தெய்வமாகக் கருதி வழிபட்ட பின்பே காட்டிற்குள் நுழைகின்றனர் (அருளானந்தம், 2014, ப. 38 & 62). இவ்வாறு வழிபடுவதாலேயே தமக்கு வேட்டை கிடைக்கும் என்பது இவர்களின் நம்பிக்கை ஆகும்.

## பூப்புச்சடங்கு

பருவமடைந்த பெண்ணிற்கு மேற்கொள்ளப்படுகின்ற பூப்புச்சடங்கு முறைகளிலும் குறவர்களின் தனித்துவம் காணப்படுகின்றது. புலிப்பல்லின் மகள் தும்முவின் பூப்புச்சடங்கு தொடர்பான விபரங்கள் இத்தனித்துவத்தை எடுத்துக்காட்டுவதாக உள்ளன. பருவமடைந்த பெண்ணை தனிமைப்படுத்தி வைப்பதற்காக இலைகுழைகளாலான குடில்களை அமைக்கின்றனர். இதற்காக நாகம்கொத்துமல், குருந்தக்கொத்து ஆகிய மரங்களின் இலை குழைகளையே பயன்படுத்துகின்றனர் (அருளானந்தம், 2014, ப. 80). இவ்வாறு அமைக்கப்பட்ட குடிலினுள் அப்பெண் எட்டு நாட்கள் தனியாக விடப்படுகின்றாள். எட்டு நாட்களும் அவளுக்கு கறியில்லாமல் வெறும் சாதம் மட்டுமே கொடுக்கப்படுகின்றது. எட்டு நாட்களில் ஐந்தாம்நாள் அவளுக்கு மஞ்சள்பூசி நீராட்டுவார்கள். பின்னர் குடிலைச் சுற்றியிருக்கும் கொத்துவேலியை நீக்கிவிட்டு அவளிடமிருந்து பேயை விரட்டுவதற்காக அவ்விடத்தில் கோழியைப் பலியிடுகின்றனர். எட்டாம் நாள் முடிவில் குடில் கலைக்கப்பட்டு அவள் வெளியே விடப்படுகின்றாள். இதன் பின்னரே ருதுசாந்தி விழா நடாத்தப்படும். இவ்வேளையில் அவளுக்கு காட்டுவேரைக் காயவைத்து அரைத்த ஒரு குளிசை உருண்டையும் சாப்பிடக் கொடுக்கப்படும். இதன் பின்னர் வெற்றிலை, பாக்கு. மதுபானம்

ஆகியவையும் அவளுக்குக் கொடுக்கப் படும் (அருளானந்தம், 2014, ப. 81).

மரணச்சடங்கு

மரணச்சடங்கிலும் குறவர்களுக் கான தனித்துவத்தைக் காணக்கூடியதாக உள்ளது. பிணத்தின் முன்பாக பிண்ணா க்குடன் முருங்கையிலை, காட்டிலுள்ள ஒருவகை மரத்தினிலை, நெத்தலிக்கரு வாடு, அரிசி ஆகியவற்றைச் சேர்த்து அவித்த பொங்கல் ஒன்றைப் படைக்கின் றனர். பிணத்திற்கு அருகில் பாத்திரமொன் றில் தண்ணீரும், வேறொரு பாத்திரத்தில் மணலும் வைக்கின்றனர். பிணத்தின் வாயில் மஞ்சள்தூளைக் குழைத்துவைத்து அதன்மேல் வெற்றிலை பாக்கும் வைக்கி ன்றனர் (அருளானந்தம், 2014, ப. 94).

மரணச்சடங்கின் போது தப்பட்டை அடித்து ஒலியெழுப்பப் படுகின்றது (அருளானந்தம், 2014, ப. 94). படையல் வைக்கப்பட்ட பிரேதத்தை மயானத் திற்குக் கொண்டு செல்லும் போது பிண்ணாக்கு அவித்த பானையை ஒருவன் தோளில் சுமந்து செல்கின்றான். மயானத் திற்குப் பெண்களும் செல்கின்றனர். பாடையைத் தூக்கிச் செல்பவர்கள் நேராகச் செல்லாமல் வளைந்து வளைந்தே செல்கின்றனர். இறந்தவனின் ஆவி திரும்பவும் வந்துவிடக்கூடாது என்பதற் காகவே இவ்வாறு பாதையில் குழப்பத்தை ஏற்படுத்திச் செல்கின்றனர் (அருளானந் தம், 2014, ப. 96). பிரேதத்தை குழியில் வைத்த பின்னர் இறந்தவனின் மனைவி தனது தாலியாகிய பாசி மாலையைக் கழற்றி இறந்தவனின் உடல்மேல் போடு கிறாள் (அருளானந்தம், 2014, ப. 98). இதன் பின்னரே குழி மூடப்படுகின்றது. மூடப்பட்ட குழியின் மேல் இறந்தவன் விரும்பியுண்ட உணவுகளை எருக்கிலை யில் வைத்துப் படைக்கின்றனர்.

இறப்புநிகழ்ந்த மூன்றாம்நாள் உறவினர்களை வீட்டிற்கழைத்து இறைச்சி யும் மதுவும் கொடுத்து விருந்து வைக்கின் றனர். இவ்விருந்து பெரும்பாலும் புதன் கிழமைகளிலேயே செய்யப்படுகின்றது (அருளானந்தம், 2014, ப. 99).

சவஅடக்கம் செய்த மறுநாள் சோறு சமைத்து இறந்தது ஆண் என்றால் பேட்டுக் கோழியையும், பெண் என்றால் சேவலையும் கறியாக்கி புதைத்த இடத்தில் படைக்கின்றனர் (அருளானந்தம், 2014, ப. 100).

இறப்பு தீட்டாகக் கருதப்படு வதால் இறப்புடன் தொடரும் மூன்று புதன்கிழமைகள் வரையிலும் அவர்கள் வீட்டிலுள்ள அம்மி, உரல், சட்டி, பானை கள் ஆகியவற்றைத் தொடுவதில்லை. இறப்பு நிகழ்ந்து இருபத்தோராம் நாளுக்கு முதல்நாள் திருக்கூடி கழிக்கும் சடங்கொன்று செய்யப்படுகின்றது. இறந்தது மணமான ஆணாக இருந்தால் அவனின் மகளை அல்லது மனைவியை பொழுது இருட்டிய பின்னர் குளத்திற்குக் கூட்டிச்சென்று தண்ணீருக்குள் இருத்தி சுளகால் மூன்று தடவை தண்ணீரை அள்ளி அவரின் தலையில் ஊற்றுவார். இதன்போது பாம்புக்குழலும் ஊதப்படும். இச்சடங்கிற்காக குளத்திற்கு வரும்போது விளக்கைக் கொழுத்தி வெளிச்சத்துட னேயே வருவார்கள். சடங்கு முடிந்து வீட்டிற்குத் திரும்பும்போது விளக்கை அணைத்து விட்டு சடங்கைச் செய்தவரின் கையில் ஓர் இரும்புத்துண்டைக் கொடு த்து கூட்டிக் கொண்டு செல்வார்கள். இவ்வாறு சடங்கை முடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்தவர் மறுநாள் வரைக்கும் எவருடனும் பேசுவதில்லை. மறுநாள் விடிகாலையில் ஏழு ஊர்களினதும், ஏழு குளங்களினதும் பெயர்களை மனதில் நினைத்தவாறு கோழி ஈரல், கோழி

மாங்காய் ஆகியவற்றைச் சமைத்து சோற்றுடன் சுளகில் கொட்டி அதனை காகத்திற்கு வைப்பார்கள். இதன் பின்பே ஊரவர்களுக்கு விருந்தளிக்கப்படு கின்றது. திருமணமாகாத ஒருவர் இறந்தால் களிமண்ணால் செய்யப்பட்ட மனித உருவத்தைச் செய்தே இச்சடங்கி னைச் செய்கின்றனர் (அருளானந்தம், 2014, ப. 101).

## மருத்துவமுறைகள்

குறவர்கள் காட்டில் வேட்டைக்குச் செல்லும் போதும், பாதுகாப்பற்ற சூழலில் வாழும்போதும் காட்டு விலங்குகளினாலும், விச சந்துக்களாலும் ஆபத்தை எதிர் நோக்குகின்றனர். ஆபத் தான நிலைகளிலெல்லாம் இவர்களுக்கு மருத்துவமனைக்குச் செல்வதற்கான வாய்ப்பு இருப்பதில்லை. இதனால் இவர்கள் தமக்கான மருத்துவத்தைத் தாமே கவனித்து வருகின்றனர். இந்த வகையில் பாம்புக்கடிக்கு இவர்கள் வெள் ளெருக்கு வேரையும், விசக்கல்லையும் பயன்படுத்தி விசத்தைப் போக்கிவிடுகின் றனர் (அருளானந்தம், 2014, ப. 33). மாட்டுக்குப் பாம்பு கடித்தால் இதரை வாழையின் கிழங்கைப் பிழிந்து சாற்றை எடுத்து உப்புத்தண்ணியுடன் கலந்து குடி க்கக் கொடுக்கின்றனர் (அருளானந்தம், 2014, ப. 202). பன்றியால் தாக்கப்பட்ட நாயின் காயத்திற்கு செங்கல்லை அரைத்து எடுத்து காயத்தின் மேல் பூசிவிடுகின்றனர் (அருளானந்தம், 2014, ப. 36). பற்சூத்தை யால் வலி ஏற்பட்டால் புகையிலையை சூத்தைக்குள் வைத்து வலியைப் போக்கி விடுகின்றனர் (அருளானந்தம், 2014, ப. 166). பிரசவ வலியினைப் போக்குவதற்கு பன்றிப்பல்லை அரைத்து உண்ணக் கொடு க்கின்றனர். பன்றிப்பல்லை அரைத்துக் கொடுத்த பின்பே இதயராணிக்கு சுகப்பிர சவம் ஏற்படுகின்றது (அருளானந்தம், 2014, ப. 228).

பெண் கர்ப்பமடைந்ததும் அவளை த்தனியானதொரு குடிலில் வைத்துப் பராமரிக்கின்றனர். இக்காலத்தில் அவளுக்குக் கொடுக்கப்படும் மருந்து வகைகளைக் கணவனும் உண்ண வேண்டும் என்பதே இவர்களின் வழக்கம். இந்த வழக்கத்தின் காரணமாகவே 'குறத்தி பிள்ளைபெறக் குறவன் பெருங்காயம் தின்றான்' என்ற பழமொழியும் உருவாகியி ருக்கின்றது. கணவன் மனைவியின் ஆடை களை உடுத்தியவாறு தானும் பிரசவ வலியால் துடிப்பதுபோல பாசாங்கு செய் கின்றான்.

## பெயரிடுதல்

பிறந்த பெண்களுக்குப் பெயரிடுவ திலும் இவர்களுக்கான சமூகமரபு பேணப்படுகின்றது. மரங்களையும் அவை சார்ந்த காடுகளையும் தங்கள் வீடுகளாக நினைத்திருந்த காலத்தில் இவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தெலுங்குமொழிப் பெயர் களையே வைத்தனர். குழந்தை ஆணா கவும் வெள்ளையாகவும் இருந்தால் அதற்கு ஏரண்ணா என்றும் கறுப்பாக இருந்தால் நல்லண்ணா என்றும் பெயரிட் டனர். இவ்வாறே பெண் குழந்தைகளுக்கு வெள்ளையாக இருந்தால் ஏரக்கா என்றும் கறுப்பாக இருந்தால் நல்லக்கா என்றும் பெயரிட்டனர் (அருளானந்தம், 2014, ப. 277). காலப்போக்கில் சில மாறுதல்கள் ஏற்பட்டாலும் பொதுவாக இவர்களின் பெயர்கள் வித்தியாசமாகவே உள்ளன. சான்றாக இந்நாவலில் வருகின்ற ஆண்களு க்கு தும்பண்ணா, ரங்கமுத்து, அணவத்து, சின்னச்சாமி, எங்கட்டண்ணா என்றவாறா கவும் பெண்களுக்கு மசக்கா, நல்லக்கா, கல்க்கட்டி, தும்மக்கா, இம்மா, யெறக்கா இம்மா, திம்முக்கா, கங்கக்கா என்றவாறா கவுமே பெயர்கள் உள்ளன. சமூக மாற்றங் கள் ஏற்பட ஆரம்பித்த போது இப்பெய

ரிடும் மரபிலும் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்திருப்பதை இதயராணி என்ற பெயர் எடுத்துக் காட்டுகின்றது.

### புழங்குபொருட்கள்

இவர்களிடமுள்ள புழங்கு பொருட்களில் குறிப்பிடத்தக்கது பாம்புப் பெட்டி ஆகும். இந்தப் பாம்புப் பெட்டியைப் பின்னுவதற்கு பாற்கொடி என்னும் ஒருவகைக் கொடியினையே பயன்படுத்துகின்றனர். இது காட்டில் அருமையாக வளர்கின்ற ஒருவகைக் கொடித்தாவரம் ஆகும். இது மரத்திற் படராமல் தரையிலேயே படர்கின்றது. இந்தக் கொடியைப் பயன்படுத்தியே பாம்புப் பெட்டியைப் பின்னுகின்றனர். பெட்டியைப் பின்னிய பின்னர் சாணகம் பூசிக்காய வைத்து அதனை உறுதியாக்குகின்றனர் (அருளானந்தம்2014, ப. 73). பாம்பு பிடிகாரனான பச்சோர் காட்டில் வேட்டைக்குச்சென்ற போது பாற்கொடியைக் காண்கின்றான். அதே காட்டில் கைப்புச் சுரக்காயும் அவனுக்குக் கிடைக்கின்றது. பாம் பாட்டும் இசைக்கருவியைச் செய்வதற்கு இக்கைப்புச் சுரக்காயினையே பயன்படுத்துகின்றனர்(அருளானந்தம், 2014, ப. 73).

### ஆபரணங்கள்

வனக்குறவர்கள் பாசிமணி, கீரை மணி மாலைகளையும் மிருகங்களின் பல். எலும்பு, நகம் ஆகியவற்றால் செய்ய ப்பட்ட ஆபரணங்களையும் அணிவதுடன் காட்டுக்கோழி, மயில், குயில் ஆகியவற்றின் இறகுகளைத் தலையிலும் சூடிக்கொள்கின்றனர் (அருளானந்தம், 2014, ப. 28, 162). இவற்றைவிட வேறு ஆபரணங்களை இவர்கள் அணிவதாகத் தெரியவில்லை.

### மரபுரீதியான சட்டங்கள்

இவர்களிடம் மரபுரீதியான சட்டங்களும் வழக்கிலுள்ளன. குற்றம் செய்தவர்களை குழுத்தலைவன் விசாரித்து அவர்களுக்கான தண்டனையை வழங்குகின்றான். இது கிராமத்து பஞ்சாயத்துப் போலவே நடைபெறுகின்றது. இவர்களின் சட்டப்படி, திருமணமான ஒரு பெண் கணவனைவிட வேறொருவருடன் ஒழுக்கப்பிறழ்வாக நடந்துகொண்டால் அவள் எட்டுவீட்டு அம்மிகளை ஒவ்வொன்றாகத் தலையில் சுமந்து பஞ்சாயத்தவர் இருக்கும் இடத்தைச் சுற்றிவரவேண்டும். களவாடிய குற்றத்திற்கு கொதிக்கும் எண்ணெயினுள் கையை வைக்கும்படி அல்லது குழி வெட்டி அதற்குள் சூரை முட்களைப் பரப்பி அதனுள் இறங்கி நடக்கவேண்டும் என்று தண்டனை வழங்கப்படுகின்றது. பெண்கள் தொழிலுக்காக எங்கு சென்றாலும் இரவு வரமுன் தங்குமிடத்துக்கு வந்து சேரவேண்டும். அவ்வாறு வரத்தவறுவதும் குற்றமாகவே கருதப்படுகின்றது. இரண்டு பெண்களைத் திருமணம் செய்வது குற்றமாகக் கருதப்படுவதில்லை. எனினும் முதல் மனைவி இதனை ஏற்றுக்கொள்ளா விட்டால் இதுவும் குற்றமாகவே கருதப்படும். இங்கு இரண்டாம் தாரமாக போன பெண்ணும் குற்றம் புரிந்தவளாகவே கருதப்படுகின்றாள். இவ்வாறான குற்றங்களுக்கு எல்லோருக்கும் முன்பாக வைத்து கசையடி வழங்கப்படுகின்றது (அருளானந்தம், 2014, ப. 128). ஒரே குலத்திற்குள் திருமணம் செய்வதும் குற்றமாகவே கருதப்படுகின்றது. இதனாலேயே மசக்காவிற்கும் ரங்கமுத்துவிற்கும் தண்டனை வழங்கப்பட்டது. இவர்கள் மூன்றுமாத காலத்திற்கு குழுவிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டனர் (அருளானந்தம், 2014, ப.129).

### பழமொழிகள்

குறவர்களின் வாழ்வியலோடு இணைந்த பழமொழிகள் சிலவற்றையும்

நாவலாசிரியர் பதிவுசெய்திருக்கின்றார். குறவனுக்கு பூனை புலவனுக்கு ஆனை (அருளானந்தம், 2014, ப. 69).

குறவன் சண்டையும் இடையன் சண்டையும் முடியாது (அருளானந்தம், 2014, ப. 71)

குறவன் வழக்கு கோட்டுக்குப் போனாலும் தீராது (அருளானந்தம், 2014, ப. 71).

குறவன் கூடிக்கெட்டான் கூத்தாடி பிரிஞ்சு கெட்டான் (அருளானந்தம், 2014, ப. 71).

குறத்தி பிள்ளைப் பெற்றால் குறவன் பெருங்காயம் தின்பான் (அருளானந்தம், 2014, ப. 225).

## மொழி

குறவர்கள் தெலுங்கு மொழியினையே தமது தாய்மொழியாகக் கருதினாலும் வாழும் சூழலுக்கேற்ப தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளையும் பேசக்கூடியவர்களாக உள்ளனர். எனினும் இவர்களின் பேச்சுத்தமிழ் தெலுங்கு கலந்த மொழியாகவே இருக்கின்றது. சான்றாக வவுனியாவில் சாராயம் வாங்கவந்த அண வத்து, "பச்சேய மூடைல்லயா போட்ட சாறாயம் றெண்டு இல்ல சாமி நீயி மூண்டு போட்டலும் அய்த்தோட அறையும் வேறயா குடு சாமி" (அருளானந்தம், 2014, ப. 14). எனப் பேசுவதும், பெண்கள் ஒருவரை ஒருவர் கூப்பிடும் போது, அடியே எல்லாறுமே ஒடன இங்கிட்டியா வாங்கிடீ..........", "யாருடி அங்கிட்டு சத்தோம் வைச்சிகிறது", "நல்லக்கா நீ கூப்பிட்டுகிட்டு இறுக்கிறது எனக்கீம் கேக்குதுங்குறேன் நானூந்தா இக்கா இப்ப அக்கிட்டா ஒடன வாறேன் வர்றேன்......" (அருளானந்தம், 2014, ப. 20). எனப் பேசுவதும் இலங்கைத் தமிழர்களின் சாதாரண பேச்சுமொழியாக இல்லாமல் வேறுபட்டிருப்பதற்கு இவர்களின் தெலுங்குமொழித் தொடர்பே காரணமாகலாம். மேலும், இவர்கள் சாதாரணமாக இவ்வாறு பேசினாலும் அவசரத்தில் பேசும்போதும், கோவமாகப் பேசும்போதும் தாய்மொழியான தெலுங்கிலேயே பேசுகின்றனர். சான்றாக ரங்கமுத்துவின் தங்கை தும்முல் பருவமடைந்தது அதுபற்றி எதுவும் அறிந்திராததால் தனக்கு என்ன நடந்தது என்பதை சகோதரியிடம் கேட்கும்போது இருவரும் தெலுங்கிலேயே பேசுகின்றனர்.

"இக்கடரா" என தமக்கையைத் தன் அருகில் வருமாறு அழைத்தவள் "எந்தோ மார்த்தார்தார்" என மயிலிடம் கேட்க மயில் "ஏந்திலை ஏந்திலை" அதாவது உனக்கு ஒன்றுமில்லை எனக் கூற தும்முல் கோபத்தோடு "நீகு தக்கு சொல்தா" என்று அதாவது நீ பொய் சொல்கிறாய் எனக் கூறுகிறாள் (அருளானந்தம், 2014, ப. 76). இங்கு இருவரும் தெலுங்கு மொழியிலேயே பேசிக்கொள்கின்றனர்.

## சமூகமதிப்பு

குறவர்களை ஏனைய சமூகத்தவர்கள் தீண்டத்தகாதவர்களாகவே கருதுகின்றனர். அருவருக்கத்தக்க செயல்களைச் செய்பவர்களை 'குறவன்' எனக் கூறுகின்ற வழக்கம் தமிழர் சமூகத்தில் இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே தமிழர்கள் குறவர்களை அருவருக்கத்தக்கவர்களாகவும், தீண்டத்தகாதவர்களாகவுமே கருதிவருகின்றனர். தமிழர்களில் சாதியடிப்படையில் தீண்டத்தகாதவர்களாக உள்ளவர்களும் குறவர்களைத் தம்மைவிடத் தாழ்ந்தவர்களாகவும் தீண்டத்தகாதவர்களுமாகவே கருதுகின்றனர். மசக்காவுடன் ஊரைவிட்டுப் போன ரங்கமுத்து போன இடங்களில் எந்த வேலையையும் செய்ய முடியாமல் தவிக்கின்றான். கூலிவேலைக்கென்று போனாலும் "இவன் குறவன் அதால களவெடுப்பான்"

என்று கூறி அவனை விரட்டிவிடுகின்றனர் (அருளானந்தம், 2014, ப. 114).

குறத்திப் பெண்கள் தேனீர்க்கடைக்குச் சென்றபோது கடைக்காரன் அவர்களுக்கென்று ஒதுக்கி வைத்திருந்த கோப்பைகளிலேயே தேனீர் கொடுக்கின்றான். (அருளானந்தம், 2014, ப. 43). வவுனியாவில் சாராயக் கடையிலில் நின்ற அணவத்து அங்கு கூடியிருந்து சாராயம் குடிப்பவர்களைப் பார்த்தபோது தானும் அவர்களோடு சேர்ந்து சிரித்துப்பேச ஆசைப்படுகின்றான். ஆனால் தனது கோலத்தைப் பார்த்தவர்கள் வெறியில் கூடத் தன்னோடு பேச விரும்பமாட்டார்கள் என்பதை உணர்வதாக ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார் (அருளானந்தம், 2014, ப. 16).

இந்த நாட்டில் வாழும் மற்றைய சமூகத்தவர்கள் குறவர்களை எவ்வாறு கணித்து வைத்திருக்கின்றார்கள் என்பதை ஆசிரியர் விரிவாகக் கூறியிருக்கின்றார்.

*“இவர்கள் இந்த நாட்டிலே பழங்குடி மக்கள். என்றாலும் இவர்கள் இன்னும் நாகரிகமடையாதவர்கள். என்றுமே இவர்கள் வீடுவாசல்களென்று நிரந்தரமாக அதில் சீவிக்காது அலைந்து திரியும் நாடோடிகளாகத்தானே இருந்து வருகிறார்கள். பாம்பையும் குரங்கையும் தூக்கி தாங்கள் போகும் இடங்களிலெல்லாம் வைத்துப் படுத்துக்கொண்டு அந்த அசுத்தக் கைகளாலேயே தின்றும் குடித்தும் இருக்கும் இடங்களெல்லாம் பிறகு குப்பையும் கூழுமாக ஆக்கிக் கொண்டு வாழ்க்கையில் ஒரு முன்னேற்றமும் இல்லாமல்களவும் பொய்யுமாக சீவிப்பவர்கள்தானே இவர்கள்”* .(அருளானந்தம், 2014, ப. 189)

இதுவே வனக்குறவர்கள் பற்றிய மற்றவர்களின் கணிப்பாகும் எனக் கூறும் ஆசிரியர் வனக்குறவர்களோடு நெருங்கிப் பழகும்போது அவர்களின் தியாகம்மிக்க வாழ்க்கையைப் பார்த்து வெட்கித் தலைகுனிய நேரிடும் என்கிறார். இதற்குச் சான்றாக அவர்களின் தியாகம் மிக்க செயற்பாடுகளை எடுத்துக்காட்டுகின்றார். வேட்டையில் கிடைத்த இறைச்சியைப் பங்கிடும்போது கூடச் சென்றவர்கள் அனைவரதும் முன்னிலையில் பங்குபோடுவதும் “எள்ளெண்ணாலும் எட்டாய்ப் பிரிச்சுத் திங்கிற சாதிப்பா நம்ம குறக்கூட்டம்” (அருளானந்தம், 2014, ப. 25) எனக் கூறுவதும் தமக்கென நிரந்தரமான ஒரு வீடில்லாமல் காடெல்லாம் அலைந்து திரிந்தாலும் நாடெல்லாம் செழிக்க, நல்லமழை பெய்ய வேண்டுமென்று தெய்வங்களுக்கு நேர்த்தி வைத்து பலியிட்டுப் படையலிட்டு வழிபாடு செய்வதைக் காணும்போதும் (அருளானந்தம், 2014, ப. 75) கூட்டத்தில் ஒருவனான சேவுகன் இறந்தபோது அது தங்கள் குடும்பத்தில் நிகழ்ந்ததாகவே நினைத்து எல்லோரும் இறுதிக் கிரியைக்காக பணஉதவி செய்வதைக் காணும்போதும் (அருளானந்தம், 2014, ப. 92) பச்சையனின் மனைவி செம்பருத்தி புருசனையும் இழந்து தனியாள் ஆகிவிட்ட போதும் தொண்ணூறு வயதான தனது தாயை, *“என்னய பெத்தவளாச்சே அவ! என்னிய பத்து மாசம் வயித்தில சுமந்து பெத்த ஒரு சீவனு அம்மா எண்ட தாயி! அப்புடியானவள அதின்ர சீவனு நல்லா போயி சேரவா மட்டும் நானு நல்லா அத பாத்து கஞ்சியின்னாலும் வேளாவேளைக்கு அதுக்கு குடுத்துக்கத்தானேம்மா வேணும்* (அருளானந்தம், 2014, ப. 197).

என்று தனது தாய்ப்பாசத்தை வெளிப்படுத்துவதைக் காணும்போதும், நெல்வயல்களில் கதிர்பொறுக்கித்தானாக உழைத்த பணத்தில் தனக்கென எதுவுமே வாங்கிக்கொள்ளாமல் அயல் வீட்டில் ஊமையாகிப்போன பிள்ளைகளோடு

உழைக்க முடியாமல் கஷ்ரப்படும் குடும்பத்திற்கு உதவிசெய்யும் இதயராணியின் தியாகத்தைப் பார்க்கும்போதும் (அருளானந்தம், 2014, ப. 196) குறவர் கூட்டத்தின் மனிதாபிமானம் எம்மை வெட்கித் தலை குனியவே வைக்கின்றது.

சமூகமாற்றம்

காலஓட்டத்தில் குறவர் சமூகத்திலும் சில மாற்றங்களுக்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்ததை ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். குறவர் குடியிருப்புக்களை திட்டமிட்டுத் தாக்கி அழித்தவர்களைப் பழிவாங்கத் துடித்த கணவன் தும்பண்ணாவிற்கு இதயராணி, "பழிவாங்கிற எண்ணத்தே மனசிலயா வைச்சிக்கப் புடாதுண்ணுதானே யேசுசாமி சொன்னதெண்ணும் நம்ம கோயிலு பாதரு பிரசங்கத்தில நமக்கெல்லாம் சொன்னாரு! நாமெல்லாம் மத்தவனு நமக்கு செய்யிற தீங்கயும் மறந்து அவங்களயும் மன்னிக்கணுமுண்ணு தான் யேசுசாமி நமக்கெல்லாமே சொல்லியிருக்கிறாராமையா.....?" (அருளானந்தம், 2014, ப. 236) எனக்கூறி அவனை அமைதிப்படுத்துகின்றாள். மேலும், "இந்தா பாருய்யா, இப்பயா அப்புடியா பாக்கிறதுக்கு கடுமையான கண்ணுங்கள வைச்சிக்கிட்டு ஊத்தே தலை மசிருங்களையும் மீசே தாடிங்களயும் வளர்த்துக்கிட்டு, பாம்புங்களயும் கொறங்குகளயும் புடிச்சியாருக்கும் வினோதங்காட்டி காசு வாங்கிக்கிட்டு, பிச்சே எடுத்துக்கிட்டு, பொய்யி சாத்திரம் எல்லாம் சொல்லிக்கிட்டு எண்ணு இப்புடியா சீவிச்சுக்கிற நம்மக்களுடே சீவியமுங்கிறது எத்தனே காலத்துக்குத்தான் நிண்ணு நிலேக்குமுண்ணு நீயும் கொஞ்சூண்டு யோசிச்சுத்தான் பாருய்யா..... எதுவுமே இந்தப் பூமியில நமக்கெல்லாமே எஞ்சாத மாதிரி நாம ஏன் இன்னும் சீவிக்கணும்! மற்றய ஜனங்க மாதிரி நாமளும் இந்த நாட்டில முன்னேறப் பார்க்கணும் ஐயா............ அப்பிடியா முன்னேறிக்க வேணுமுண்ணா முக்கயமா நாம என்ன செய்யணுமுண்ணா..நமக்கு பொறந்திக்கிற புள்ளங்க எல்லாமே நாம பள்ளிக் கூடத்துக்கு படிக்கவெண்ணு அனுப் பணுமையா....... அப்புடியா புள்ளங்கள படிச்சிக்க வைச்சிக்கிறதுக்கு நாமளு எல்லாரும் அதுக்காக பாடு படனுமையா......... அப்புடி பெறிய பெறிய படிப்புங்களயெல்லாம் நம்ம புள்ளங்களும் மத்த புள்ளங்க மாதிரி படிச்சிட்டா......... நம்ம ஜனமும் மத்த ஜனங்க மாதிரி ஒசந்திக்குமையா! அப்புடியா நம்ம புள்ளங்கெல்லாம் நல்ல பெரிய படிப்புங்களப் படிச்சாத்தான் இனி வந்துக்கிற நம்ம பறம்பர முன்னேறிக்குமையா.... அப்புறம் குறவேன் என்று நம்மங்கள பாத்து யாரு ஒருவேன் வாயால சொல்லிக்கு வாங்க......(அருளானந்தம், 2014, ப. 240)

இதயராணியின் சிந்தனை பார்ப்பதற்கு அருவருப்பான கோலங்களில் திரிந்து பிச்சை எடுத்தும் சாத்திரம் சொல்லியும் குரங்காட்டி வினோதங்காட்டியும் பிழைக்கின்ற பிழைப்பை விடுத்து படித்து மற்றவர்களைப்போல குறவர்களும் முன்னேற வேண்டும் என்பதுதான். ஆனால் நாவலின் முடிவில் இதயராணிக்கு ஏற்பட்ட மரணம் அவளின் சிந்தனைகளை வெறும் கனவாகவே ஆக்கியிருக்கின்றது என்றே உணரக் கூடியதாகவுள்ளது. கனவு மெய்ப்பட வேண்டுமானால் இவ்வாறான சிந்தனையின் ஊற்றுக்களை அவளுக்களித்த கிறிஸ்தவம் தனது முயற்சியில் சற்றும் தளராமல் தொடர்ந்தும் தட்டிக் கொண்டே இருக்குமானால் இதயக் கதவுகள் பலவும் என்றோ ஒருநாள் திறக்கப்பட்டு இந்த மக்களின் வாழ்விலும் விடியலுக்கான வாய்ப்புக்கள் உருவாகலாம்.

## உசாத்துணை

அருளானந்தம், நீ. பி. (2014). இந்தவனத்துக்குள், திருமகள் பதிப்பகம், கல்கிசை.

குகபாலன், கா. (2000). இலங்கையில் பழங்குடிகள், கொழும்பு.

சீனிவாசசர்மா, கோ. (1978). நரிக்குறவப் பழங்குடி மக்கள், அனைத்து இந்திய தமிழ்மொழியியற் கழகம், அண்ணாமலைநகர்.

பக்தவத்சலபாரதி, சீ. (2014). இலக்கிய மானிடவியல், அடையாளம், திருச்சி.